# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 32. மளிகைக் கடைகள் / சிறு கடைகள் (Groceries /boutiques)

**பிரத்தியேக தகவல்கள்/வழிகாட்டல்கள்**

**இயக்குனர் / உரிமையாளர்/ வேலை வழங்குனர்**

- உள்நுழையும் நபர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும்.
- உள்ளே அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையைக் குறிக்கும் அறிவிப்பு நுழைவாயிலில் காட்சிப் படுத்தப்படலாம்.
- மாற்று வழியாக வாடிக்கையாளர்கள் கொள்வனவுப் பட்டியலினை கடைப் பணியாளரிடம் வழங்கிய பின்னர் அப்பொருட்களை பொதி செய்து தரும்வரை வெளியே காத்திருந்து பொருட்களைப் பெற்றுச் செல்லும் முறையினை அறிமுகப்படுத்தலாம்.
- ஊழியர்கள் தமது சுயபாதுகாப்பை உறுதி செய்து கொள்வதுடன் முகக்கவசங்களை அணிந்து கொள்ள வேண்டும். கைச் சுகாதாரம் தொடர்பில் கவனத்தைச் செலுத்துவதுடன் தும்மும் போது மெல்லிழைத் தாளினால் (tissue) அல்லது முழங்கையினால் மூக்கினையும் வாயினையும் மறைத்துக் கொள்ளுதல் வேண்டும்.
- அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் பொருட்கள்/மேற்பரப்புகளான கதவு மற்றும் குளிரூட்டிகளது கைப்பிடிகள், பொருட்கூடைகளது கைபிடிகள் (shopping basket/cart handles), காட்சிப்படுத்தும் சாளரங்கள் மற்றும் எண்ணகங்கள் போன்றவற்றை சுத்தம் செய்து தொற்றுநீக்குக.
- கதவுகளைத் தொடும் சந்தர்ப்பங்களைக் குறையுங்கள்–வளிப்பதனாக்கிகள் இல்லாத கடைகளின் கதவுகளைத் திறந்தே வைத்திருங்கள்.
- கதவுகளைக் கையாளுவதைக் குறைப்பதற்கானமுயற்சி செய்யுங்கள் – குளிரூட்டப்படா விட்டால் கதவுகளைத் திறந்து விடுங்கள்
- பொருட்களை முன்கூட்டியே பொதியிட்டு வைப்பதன்மூலம் ஒவ்வொரு வாடிக்கையாளருடனும் செலவிடும் நேரம் குறைக்கப்படும்.
- மேம்படுத்தப்பட்ட நிகழ்நிலை கொள்வனவு (online shopping) / மின்னியல் கொள்வனவிற்கான (electronic shopping) தெரிவுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் (ஒரு சிறிய பகுதிக்கு சேவையளிக்கும் சிறிய கடைகளாயினும், தங்கள் வாடிக்கையாளர்கள் குறுஞ்செய்தி மூலம் தேவையான பொருட்களுக்கான கொள்வனவுக் கட்டளைகளை வழங்கும் முறையினை அறிமுகப்படுத்தலாம். இதன்மூலம் வாடிக்கையாளர் கடையில் செலவிடும் நேரம் குறைக்கப்படும்).
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**பயனாளர் / வாடிக்கையாளர் / எமக்கு**

- முகக்கவசங்களை அணிய வாடிக்கையாளர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சம் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணுமாறு அறிவுறுத்தப்படுவதுடன் சுவாச நற்பழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.
- வாங்கவேண்டிய பொருட்களை முன்னதாகவே திட்டமிட்டுக் கொள்ளுங்கள். இதன்மூலம் பேரங்காடிகளில் செலவு செய்ய வேண்டிய நேரத்தைக் குறைத்துக் கொள்ள முடியும். இயலுமாயின் நீங்கள் வாங்கவுள்ள பொருட்களின் பட்டியலை பேரங்காடிக்கு முன்கூட்டியே அனுப்புவதன் மூலம் அவற்றைத் தயாராக வைத்திருக்கும்படி செய்யலாம். அடிக்கடி பொருட்கொள்வனவு செய்யச் செல்வதனைத் தவிர்க்கவும்.
- இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் நிகழ்நிலை கொள்வனவு முறையினைப் பயன்படுத்துவதோடு நிகழ்நிலைப் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்ளவும்.

- பணத்தைக் கையாளுவதைக் குறையுங்கள். முடிந்தவரை சரியான தொகையினை வழங்குவதற்கு முயற்சிக்கவும்.
- இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள பேரங்காடிகளுக்கு செல்வதுடன், சனநெரிசலான கடைகளுக்குச் செல்லாது தவிர்க்கவும்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- முகக்கவசம் அணிதல், கைச் சுகாதாரம், சுவாச நற்பழக்கங்கள், ஆட்களுக்கு இடையில் உடல் இடைவெளியினைப் பேணுதல், உள்ளே அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை போன்ற தகவல்களை நுழைவாயிலில் சுவரொட்டிகள் மூலம் காட்சிப்படுத்தலாம்.
- பொதுச் சுகாதார அதிகாரிகளினால் இந்த வழிகாட்டல்கள் நடைமுறைப்படுத்தப்படுவது குறித்த மேற்பார்வையும் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும்.



**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020